


# கொல்லைப்புறத்தில் கொசுக்கடித் தொல்லையா?

கோடை காலம் வந்தது. தூரத்து இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்யும். மழை நீர் கொல்லைப்புறமாய் தேங்கி நிற்கும். எங்கிருந்தோ வரும் நுளம்பு குடி கொண்டு, மாலைப் பொழுதுகளில் ஊசியால் குத்தி இரத்தப் பரிசோதனை செய்யும்.

உங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே நுளம்பை அண்ட விடாமல் வைக்கக் கூடிய தாவரங்களை நாட்டுங்கள். நுளம்புத் தொல்லையும் குறையும். தோட்டமும் அழகு பெறும். நுளம்புத் தொல்லை இன்றி, மாலை நேரங்களில் தோட்டத்தின் அழகை காதல் துணையுடன் கரம் கோர்த்து ரசிக்கலாம். (இருந்தாலும், இதெல்லாம் ரூ மச் தான்!)

நம்ம செவ்வந்திப் பூச் செடி... அதன் மணம் நுளம்புக்கு அலர்ஜி. ஆதலினால், செவ்வந்திப் பூ முடிச்ச சின்னக்காமாரின் கூந்தல் மணம் நுளம்புக்குப் பிடிக்காது. மானாமதுரை மச்சானுக்குப் பிடிக்கும்!

லெமன் பாம் (Lemon Balm) தேசிக்காய் மணத்துடன் இருக்கும் பல்லாண்டு வாழி. ஆனால் ஒன்று, வேகமாய் வளர்ந்து இடத்தைப் பிடிக்கும். தொகையாய் விதை போட்டுப் பெருகும். எனவே, பூஞ்சாடிக்குள் வைத்து வளருங்கள். மாலையில் ஒரு புறமாய் காதல் துணை, மறுபுறமாய் பூஞ்சாடி சகிதம் கொசுத் தொல்லை அகற்றுங்கள்.

பூனைகள் காதல் கொள்ளும் கற்நிப் எனப்படும் Catnip இல் உள்ள இயற்கையான எண்ணெய் நுளம்புக்காய் விசிறும் மருந்தை விட பல மடங்கு பலம் வாய்ந்தது. ஆனாலும், பக்கத்து வீட்டுப் பூனைக்கு மணம் பிடித்தால், உங்கள் கொல்லைப்புறம் பூனையின் மலசலகூடமாயும் மாறலாம்.

**நுளம்பை அடிப்பதாகச் சொல்லி, உங்கள் கன்னத்தில் உங்கள் காதல் துணை அறைவதும் நிற்கும்.**

லெமன் பசில் (Lemon Basil) இன் தேசிக்காய் மணம் நுளம்பை விரட்டும். இதன் இலைகளை கசக்கி தோல் பகுதியில் பூச, நுளம்புத் தொல்லை நீங்கும்.

லவெண்டர் (Lavendar), பெப்பர்மின்ட், றோஸ்மேரி, உள்ளி போன்றனவும் நுளம்புத் தொல்லை அகற்றும்.

மேற்குறிப்பிட்ட தாவரங்களை பச்சையாய் இடித்து, வொட்கா குடிவகையில் ஊற வைத்து, அதன் சாற்றை விசிறுங்கள். நுளம்பு வராது. நுளம்பை அடிப்பதாகச் சொல்லி, உங்கள் கன்னத்தில் உங்கள் காதல் துணை அறைவதும் நிற்கும்.

# குப்பை கொட்டி, குப்பை அள்ளுங்கள்!

றொறன்ரோ நகரசபை நடத்தும் சுற்றாடல் நாட்களில் நீங்கள் வீட்டுத் தோட்டத்திற்கான உக்கிய குப்பை அள்ளலாம். வீட்டில் உள்ள குப்பைகளை அங்கே கொண்டு போய் மீள்சுற்றுக்கு கையளிக்கலாம்.

**ஜூன் மாதம்**

*7 சனிக்கிழமை*
*ஏஜின் கோர்ட் கடைத்தொகுதி 3850 ஷெப்பார்ட் வீதி கிழக்கு (கென்னடி றோட் சந்தி)*
*ஜூன் 8 ஞாயிறு 70 நாஷ்டீன்*
*12 வியாழன் 93 பேர்ச்மவுண்ட்வீதி (கிங்ஸ்ரன் சந்தி)*
*14 சனிக்கிழமை*
*செனகா கல்லூரி 1750 பிஞ்ச் அவனியூ கிழக்கு, பின்பகுதி கார் தரிப்பிடம் (டொன்மில்ஸ் வீதிக்குள்ளால் செல்லவும்)*
*21 சனிக்கிழமை*
*லமொரோ கம்யூனிட்டி றிக்றியேஷன் சென்ரர் (மக்நிக்கல் வீதியில், கென்னடி வீதிக்கு மேற்குப் புறமாய்)*
*28 சனிக்கிழமை*
*கேணல் டான்போர்த் பார்க், 73 கேணல் டான்போர்த் றெயில் (கிங்க்ஸ்ரன், லோசன் சந்திப்பு)*

**ஜூலை மாதம்**

*10 வியாழன் 45 ஓவர்லீ போலவார்ட் (தோர்ண்கிளிப் பார்க் ட்ரைவ்)*
*12 சனிக்கிழமை மல்வேர்ண் கம்யூனிட்டி றிக்றியேசன் சென்டர் 30 சுவல்ஸ் றோட்*
*19 சனிக்கிழமை 1967 எல்ஸ்மியர் றோட் (மார்க்கத்திற்கு மேற்குப் புறம்)*
*891 மோர்ணிங்சைட் அவனியூ (401 நெடுஞ்சாலை)*
*26 சனிக்கிழமை 500 கன்சியூமர்ஸ் றோட் (விக்டோரியா பார்க்கின் மேற்குப் புறம்)*
*40 பெயர்பக்ஸ் கிறசன்ட் (வார்டன் அவனியூவின் மேற்குப் புறம்)*

வார இறுதி நிகழ்வுகள் 10 மணி முதல் 2 மணி வரையும், வியாழன் நிகழ்வுகள் மாலை 4 முதல் எட்டு மணி வரையும் நடைபெறும்.

பழைய மின்னியல், இலத்திரனியல் பொருட்கள் (கம்பியூட்டர்கள், தொலைபேசிகள், தொலைக்காட்சிகள், ரேடியோக்கள், வீடியோக்கள்...), வாகன எண்ணெய், மின்கலங்கள், பழைய மருந்துகள், பழைய புளோரசன்ட் மின்குமிழ்கள், இறைச்சி வாட்டிய புறப்பேன் தாங்கிகள், எஞ்சிய பெயின்ட் டின்கள் மீள்சுற்றுக்கு கையளிக்கலாம்.

இதை விட பாடசாலைகளுக்கு நன்கொடையாக வழங்கக் கூடிய குழந்தைகளுக்கான புத்தகங்கள், பாடசாலைச் சீருடைகள், சிடிக்கள், பென்சில் போன்ற எழுத, கீற உதவும் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், கண்ணாடி, காது கேட்கும் கருவி, கைத்தடி போன்ற மருத்துவக் கருவிகள், சமையலறைப் பாத்திரங்கள், துணிகள், ஏழைகளுக்கான உணவு வங்கிக்காக பழுதாகாத உலர், டின் உணவு வகைகள் போன்றவற்றை அங்கே கையளிக்கலாம்.

சும்மா வெறுங்கையோடு போய் ஓசியில் குப்பை அள்ளாமல், பயன்படக் கூடிய எதையாவது கொண்டு போய் கொடுங்கள்.

குப்பையும் நீங்கும். புண்ணியமும் கிட்டும். பயிரும் செழித்து வளரும்.



**'பின்' குறிப்பு**

நான்கு பக்கங்களுடன் சிறிதாக இருந்தாலும், சுவடி கார சாரமாய் இருப்பதாக வாசகர்கள் பாராட்டுகிறார்கள். நாலா திசைகளிலும் பெருமை பெறும் சுவடியின் நான்காம் இதழ் இது.

பாம் பிரிண்ட் அச்சுக் கலையகத்திற்கான விளம்பரமாக ஆரம்பித்த சுவடி வாசகர்களால் தேடி வாசிக்கப்பட்டு, பொக்கிஷமாகப் பேணப்படுவதைக் கண்ட தொழில் முனைவோர் தாங்களாகவே விளம்பரங்களைத் தர முன்வந்தது சுவடியின் வெற்றிக்கு அடையாளம். முழுக்க முழுக்க விளம்பரங்களையே நம்பியிருந்து, பக்கங்களை விளம்பரங்களால் நிரப்பி பணம் பண்ணும் ஆர்வம் எங்களுக்கு இல்லை. இதனால் சுவடியில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்த அளவே விளம்பரங்களுக்கு ஒதுக்கப்படும்.

தகவல்கள் அதிகமாய் இருப்பது வாசகர்கள் பயன் பெற வேண்டும் என்பதற்காக. விளம்பரங்கள் குறைவாக இருப்பது விளம்பரதாரர்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக. நூற்றுக்கணக்கான விளம்பரங்களுக்குள் தொலைந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே, மற்றப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது நிறுத்தப்பட்டு சுவடி ஆரம்பிக்கப்பட்டது.

சுவடிக்குள்ளே விளம்பரப் பிரசுரங்களை வைத்து வினியோகிக்கும் சேவையையும் ஆரம்பித்திருக்கிறோம். விளம்பரதாரர்களை ஆதரியுங்கள். சுவடியில் உங்கள் விளம்பரத்தைக் கண்டோம் என்பதைச் சொல்லி வையுங்கள்.

சிறுவர்த்தகங்களின் வளர்ச்சி சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி.

சுவடியின் வளர்ச்சி ஒரு சமூகத்தின் அறிவின் வளர்ச்சியாக இருக்கட்டும்.

**காரம் நிறைந்த கடுகுச் சுவடி**

Palm Print Inc
Design & Print
• Copy • Print • Sign
• Logo Design • Ad Design
416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com

This newsletter is edited, printed and published by Palm Print Inc.
இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது



பாம் பிரிண்ட்
# சுவடி
SUVADI
ஏடு 1 ஓலை 4



'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!
நியாயமான விலை!
உறுதியளித்த நேரத்தில்!
பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்
416.284.9545
palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8

# கணவன்மார் உயிரை வாங்கும் மனைவியர்

மனைவியருக்கு பிராணசகி என்று நம் முன்னோர் பெயர் வைத்தது, சகிக்க முடியாதபடிக்கு கணவன்மாரின் பிராணனை வாங்குவதாலோ என்னவோ என்ற நமது மூளையைக் குடைந்த நீண்ட நாள் சந்தேகத்தை நிவர்த்தி செய்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள். சதா நச்சரிக்கும் வாழ்க்கைத் துணையைக் கொண்ட கணவர்களின் வாழ்க்கை பத்து வருடங்களுக்குள் முடிவதற்கான சந்தர்ப்பம், அன்பான வாழ்க்கைத் துணையைக் கொண்டவர்களை விட இரண்டரை மடங்கு அதிகமானது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

மனைவிமாருடன் வாக்கு வாதங்கள், சண்டைகள், நச்சரிப்புகள் காரணமாக ஏற்படும் கவலையால் கணவன்மார் விரைவில் இறக்க நேரிடலாம் என்கிறது இவர்களின் ஆய்வு. வருடாந்தம் இறப்பவர்களில் சராசரி ஒவ்வொரு லட்சத்திற்கும் 315 பேர் பெண்களின் தொல்லையால் இறக்கிறார்களாம். டென்மார்க் கொப்பன்காகன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வு ஒன்றில் இந்த தொடர்பை அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வழமையில், மன அழுத்தம் உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தி, இருதய நோய் ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. அத்துடன் உடற்பயிற்சி செய்யாமை, சத்தில்லா உணவு உண்ணல் போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது. ஆண்களில் மன அழுத்தம், உடல்நலக் குறைவுடன் சம்பந்தமான கிறிஸ்டோல் என்ற ஓமோனை அதிகளவில் சுரக்க வைக்கிறது.

இதைவிட, ஆண்களுக்கு நண்பர்கள் தொகை குறைவாக இருப்பதால், அவர்களின் வாழ்க்கைத் துணை அவர்களுக்கு முக்கியமானது. அந்தத் துணையின் நச்சரிப்பினால் மன அழுத்தம் அதிகமாக ஏற்பட்டால், அவர்களால் ஆறுதல் தேட முடியாமல் போகிறது. இந்த மன அழுத்தமே இவர்களின் இறப்புக்கு காரணமாகிறது.

அத்துடன் இந்த ஆண்கள் வேலை அற்றவர்களாகவும் இருந்தார்கள் என்றால், மரண வீதம் இன்னும் அதிகமாக இருக்கிறதாம். நச்சரிப்புக்குள்ளாகும் வேலையற்ற ஆண்களின் இறப்பு வீதம் ஒரு லட்சத்திற்கு 830 ஆகும் என கணிப்பிடப்பட்டுள்ளது. சமூகத்தின் ஆண் சம்பாதித்துக் குடும்பத்தைப் பார்க்க வேண்டிய நிலையில் இருப்பதால், வேலையில்லாததால் ஏற்படும் மன அழுத்தம் இந்தப் பிரச்சனையை அதிகரிக்கிறது. அதிலும் அடிக்கடி வாக்குவாதங்களில் ஈடுபடுவது தான் ஆண்களின் உடல் நலத்திற்குக் கேடாகிறது என்கிறது இந்த ஆய்வு.

Journal of Epidemiology & Community Health என்ற சஞ்சிகையில் இந்த ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 36 முதல் 52 வயதான பத்தாயிரம் ஆண்களையும் பெண்களையும் அவர்களுடைய தினசரி சமூக உறவுகளையும் குடும்பப் பிரச்சனைகளையும் பற்றிக் கேட்டறிந்து அவர்களின் வாழ்வு பத்து வருடங்களாக அவதானிக்கப்பட்டது. இதில் மனைவி, பிள்ளைகளின் கவலைகள், தொந்தரவினால் இறப்பவர்களின் விகிதம் ஐம்பது வீதம் அதிகமாகக் காணப்பட்டது.

ஆனால், பெண்கள் இவ்வாறான விடயங்களால் பாதிக்கப்படவில்லை என்பதும் இந்த ஆய்வின் இன்னொரு முக்கிய முடிவு.

இந்த ஆய்வின்படி பார்த்தால், ஒன்பது தடவை காப்பி குடிக்காமலும், எண்பது ரூபா புடைவை கேட்காமலும், வகையில்லாப் பொருளை எண்ணி கணவனுடன் வாதம், பிடிவாதம், வம்பு பண்ணாமலும் இருந்தால், ஐம்பது ரூபா சம்பளக்காரன்கள் நீண்ட ஆயுளுடன் வாழவும், பெண்சாதிகள் தீர்க்கசுமங்கலிகளாக வாழவும் சந்தர்ப்பம் உண்டு போலும்.

ஆண் மேலாதிக்கக் கருத்தில் படுபிற்போக்கான செய்தி வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி, விளக்குமாறு, துடைப்பக்கட்டை, முறம் போன்ற கனரக ஆயுதங்களுடன் போராட்டத்திற்குத் தயாராகும் பெண்ணியவாதிகள், முந்தானையில் தொங்கும் புத்திஜீவிகள் தங்கள் ஆட்சேபனைகளை எழுதி அனுப்புவார்களாக... டானிஷ் மொழியில்! கொப்பன்காகன் பல்கலைக்கழகத்திற்கு நாமே அனுப்பி வைப்போம்.

(மனைவி, துணைவி என்று இரண்டு பேரை வைத்துக் கொண்டு, சொத்துச் சண்டை, வாரிசுச் சண்டை, அரசியல் சண்டை என்றெல்லாம் தலைக்கு மேலால் பிரச்சனைகளையும் வைத்துக் கொண்டு, எண்பது வயதையும் தாண்டி கருணாநிதியால் வாழ முடிகிறது என்ற விவகாரம் ஏன் தான் கொப்பன்காகன் ஆய்வாளர்களுக்குத் தெரியாமல் போனதோ என்பது தான் இப்போது நமது மண்டையைக் குடையும் கேள்வி.)

# நூலகப் புத்தகங்களைக் கணனிக்குள்ளால் வாசியுங்கள்

நீங்கள் வீட்டில் இருந்தபடியே, நூலக புத்தகங்களை வாசிக்கலாம். எப்படி? இணையம் மூலமாக, உங்கள் நூலக அடையாள அட்டையுடன் நூலக தளத்திற்குள் சென்று உங்களுக்குத் தேவையான புத்தகங்களைத் தேடுகிறீர்கள். தேடிப் பிடித்த தெரிவுகளில் இடதுபுறப் பகுதியில் ebooks and Online Content என்று இருக்கும் தெரிவில் அழுத்தினால், ஒரு பட்டியல் வரும். அதில் Read Online என்ற பொத்தானில் அழுத்தி. இணையம் மூலமாக உங்கள் கணனியிலேயே நீங்கள் புத்தகங்களை வாசிக்கலாம்.

தற்போது ஆங்கிலத்தில் வெளிவரும் பல புத்தகங்கள் இலத்திரனியல் வடிவத்தில் வருவதால், அவற்றை நூலகத்திற்குப் போகாமலேயே வீட்டில் இருந்தபடியே வாசிக்கலாம். ஆனால், தமிழ்ப் புத்தகங்கள் பெரிதாக இன்னமும் அந்த வடிவத்தில் வரவில்லை. நாவல்கள், பொது அறிவு பற்றி மட்டுமன்றி, கணனி பற்றியும், செயலிகள் பற்றியும் அறிந்து கொள்வோருக்கு இது பெரிய வரப்பிரசாதம்.

பிரஜா உரிமை
வதிவிட உரிமை
பத்திரங்கள் நிரப்புதல்
ஆவண மொழிபெயர்ப்பு
Super Visa
416.269.5883
Citizenship
PR Forms
Sponsorship Forms
Translation Services

# கணனியில் குப்பை கொ(கூ)ட்டுவது எப்படி?




பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நன்னூல் பாடல் கூறுகிறது. நமக்கு புது வருடம் இந்தத் தொடக்கமாயிருந்தாலும், இங்கே வசந்த காலம் தான் எதற்குமே தொடக்கம். இந்த வகையில் வீட்டுக்குள் இருக்கும் பழைய பொருட்களை கழிக்குமாறு கடந்த இதழில் கூறியிருந்தோம். உங்கள் கணனியும் அடிக்கடி முகப் புத்தகத்தையும் யூடியூப்பையும் வலம் வந்திருக்கும். புலம் பெயர்ந்த ஈழத்தவர் யார் யார் சிவபதவி அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மரண அறிவித்தல் தளத்திற்கும் தினசரி வேறு சென்று வந்திருப்பீர்கள். மரண வீட்டுக்குச் சென்றால், ஏன்... சும்மா வெளியே போய் வந்தாலே கால் கழுவி துப்புரவு செய்து வீட்டுள் நுழைவது நம் பண்பாடாச்சே!இதோ, உங்கள் கணனிக்குள்ளும் காற்றுக் கறுப்பு அண்டாதிருக்கும் வகையில் துப்புரவு செய்ய சில வழிகள்...

நீண்ட காலப் பாவனையின் போது, வேண்டத்தகாத பொருட்கள் கவனிப்பாரற்றுப் பெருகி, குப்பையாய் நிறைவது போல, கணனியிலும் இணையத் தளங்கள் விட்டுச் செல்லும் காலடிச்சுவடுகள் உட்பட்ட அனாவசியப் பொருட்கள் கணனியை நிறைத்திருக்கும். CCleaner என்ற செயலியைhttps://www.piriform.com/ccleaner/ download என்ற தளத்தில் பதிவிறக்கம் செய்யுங்கள். அதைச் செயற்படுத்தும்போது அந்த ஜன்னலில் கீழ் உள்ள Analyze என்ற பட்டனை அழுத்துங்கள். உங்கள் கணனியில் உள்ள குப்பைகள் எல்லாவற்றையும் தேடி உங்கள் முன் கொண்டு வந்து கொட்டும். அதை எல்லாம் அழிப்பதா என்று கேட்கும் போது Run Cleaner என்ற பட்டனை அழுத்தி, ஓகே செய்யுங்கள்.

முடிவில் எவ்வளவு குப்பை இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது என்பதை அறிந்து பிரமித்துப்போவீர்கள்.

நீங்கள் புதிதாய் வாங்கும் கணனியில் உங்களுக்குத் தேவைப்படாத பல செயலிகளை போட்டு நிரப்பியிருப்பார்கள். அவை அவ்வப்போது தலையை நீட்டி, அரிகண்டம் தரும். இந்தத் தலையிடியை எப்படி அகற்றுவது என்று மூளையைப் போட்டுக் குழப்பியிருப்பீர்கள். (உங்களுக்கு மூளையில்லை என்று யாராவது சொல்லியிருந்தால், இதை ஆதாரமாகக் காட்டுங்கள்!)

PCDecrapifier என்ற செயலி உங்கள் கணனியின் மூலைமுடுக்குகளில் தேடி தேவையில்லாத செயலிகளை அகற்றும். அகற்ற முன்னால் உங்களையும் ஒரு வார்த்தை கேட்கும். அந்தச் செயலியை http://pcdecrapifier.com/ என்ற தளத்தில் தரவிறக்கம் செய்யுங்கள். அதைச் செயற்படுத்தும்போது, அது தேவையில்லாதவற்றை உங்கள் முன்னால் கொட்ட, எவற்றை அழிக்க வேண்டுமோ அவற்றைத் தெரிவு செய்து அழியுங்கள். இடம் மிச்சம். தலையிடியும் குறையும்.

குப்பைகளை நீக்கி, வீடு துப்புரவாக இருந்தால் காற்றுக் கறுப்பு அண்டாது.

அதுசரி... துப்புரவாக்கி, மிஞ்சிய இடத்தை என்ன செய்வது? பழையபடி குப்பை கொட்ட ஆரம்பிக்க வேண்டியது தான்... முகப்புத்தகத்தில்!


ஒரு வீட்டை மாளிகையாக்குவது தளபாடங்களே!
உங்கள் வீட்டை மலிவு விலையில் மாளிகையாக்க..
Sunflowers furniture
3024 Kennedy Rd
416.609.8556


# பணத்தை எரிபொருள் ஆக்காதீர்கள்!



கோடை தொடங்கி விட்டது. காரில் ஊர்கோலம் ஆரம்பிக்கும். அதை அறிந்த எரிபொருள் நிறுவனங்கள் வார இறுதியில் வழமை போல, கேட்பாரின்றி விலையைக் கூட்டும். அதிலும் மசகு எண்ணெய் விலையும் கூடி, கனடிய டொலரின் பெறுமதியும் குறைய, விலை உச்சத்திற்கே போகும். திட்டிக் கொண்டே எரிபொருள் நிரப்புவீர்கள்.

இருந்தாலும் உங்கள் வாகனத்தின் எரிபொருட் பாவனையைக் குறைக்க பல வழிகள் உண்டு.

1. வாகனத்தின் வேகத்தை மிக வேகமாக அதிகரிக்காதீர்கள். அதிலும் பலர் சிவப்பு விளக்கில் நின்று, பச்சை விளக்கில் அசையத் தொடங்கும்போது, மாமியார் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் ஏறி மிதிப்பார்கள். மெதுவாக வேகத்தை அதிகரிக்கும்போது, எரிபொருள் குறைவாகவே பயன்படுகிறது.

2. கார்கள் நிறைந்ததால், அடிக்கடி நின்று, பின் நகரும் பாதைகளைத் தவிர்த்து, சீரான வேகத்தில் நகரும் பாதைப் பகுதிகளில் காரைச் செலுத்துங்கள்.

3. குறைந்தளவு வாகன நெரிசல், சமிக்ஞை விளக்குகள் உள்ள பகுதிகளைப் பயன்படுத்துங்கள். நகரெங்கும் பல குறுக்குப் பாதைகள் உள்ளன. அவற்றைத் தெரிந்து வைத்திருங்கள்.

4. நகரும்போது, தொலைவில் வாகனத்தை நிறுத்த வேண்டி வந்தால், எரிபொருள் மிதியிலிருந்து காலை எடுங்கள். கார் தானாகவே மெதுவாகப் போய் நிற்க வேண்டிய இடத்தில் நிற்கும். அல்லது மெதுவாக பிரேக்கை அழுத்துங்கள்.

5. சீரான வேகத்தில் செல்வதற்கான Cruise control வசதி உங்கள் வாகனத்தில் இருந்தால் அதைப் பயன்படுத்துங்கள். அடிக்கடி வேகத்தை கூட்டிக் குறைப்பது எரிபொருளைச் செலவாக்கும்.

6. தேவையில்லாத பாரப் பொருட்களைக் காரில் வைத்திருக்க வேண்டாம். ஏற்றவும் வேண்டாம். (மாமியார் உட்பட!)

7. காரின் மேல் பொருட்கள், அல்லது பின்னால் சைக்கிள்களை வைக்காதீர்கள். காற்றின் இழுவை உங்கள் வேகத்தைக் குறைக்கும்.

8. பாதைகளில் குறிப்பிட்ட வேகத்தை மீறி வேகமாய் செல்லாதீர்கள். 90 கிமீ வேகத்தில் செல்வதை விட, 110 கிமீ வேகத்தில் செல்லும்போது, ஐந்தில் ஒரு பகுதி அதிகமாய் எரிபொருளை வீணாக்குகிறீர்கள்.

9. பயணத்தை நிதானமாய், அவசரமில்லாமல் ஆரம்பியுங்கள். கடைசிநேரம் வரை காத்திருந்து விட்டு, ஐயோ, நேரம் போய் விட்டதே என்று வேகமாய் செல்லப் போனால், எரிபொருளும் வீணாகும். வழியில் வேகமாய் போனதற்கு டிக்கட்டும் கிடைக்கலாம்.

10. காரின் டயர்களில் சரியான அளவு காற்றழுத்தத்தைக் கொண்டிருங்கள். குறைந்த காற்றழுத்தம் கூடிய எரிபொருளை வீணாக்கும்.

11. காற்று வடிப்பான்களை சரியான நேரத்தில் மாற்றுங்கள். அவற்றில் தூசி படித்தால், போதியளவு காற்று எரிபொருளுக்கு கிடைக்காமல், எரிபொருள் வீணாகும்.

12. உங்கள் சக்கரங்களை சரியான முறையில் வைத்திருங்கள். அவை திரும்பியிருந்தால், ஒரு பக்கம் இழுக்க, எரிபொருள் வீணாகும்.

13. உங்கள் வாகனத்தை ஒழுங்கான முறையில் எண்ணெய் மாற்றம் போன்றவற்றைச் செய்து, சரியான முறையில் பேணுங்கள்.

14. வாகனத்தைப் பயன்படுத்துவதை விட்டு, பஸ், நிலக்கீழ் ஊர்திப் பாவனையைக் கூட்டுங்கள். நடவுங்கள். உடலுக்கு ஆரோக்கியமாக இருக்கும்.

14. ஸ்காபரோவில் மலிவு விற்பனை என்பதற்காக பிராம்டனிலிருந்தோ, பிக்கரிங்கில் இருந்தோ அநியாயத்திற்கும் காரில் வந்து 99 சதம் நெத்தலிக் கருவாடு வாங்காதீர்கள். பிராம்டனில் கடை வைத்திருக்கும் தமிழ்மகன்களுக்கும் வாழ்வளியுங்கள். அவர்களிடம் ஒரு டொலருக்கு நெத்தலிக்கருவாடு கிடைக்கலாம். (கிடைத்தால் சொல்லுங்கள், நாங்கள் பஸ்ஸில் வந்தே பிராம்டனில் வாங்குவோம்)

இப்படியான வழிகளைப் பயன்படுத்தி, எரிபொருள் செலவை மட்டுமன்றி, காப்புறுதி, கார்நிறுத்துமிடச் செலவு போன்றவற்றையும் குறைத்தால், உங்கள் பழைய காரை விற்கும்போது அதற்கு மதிப்பான விலையும் கிடைக்கும்.


கழுத்து, தோள்பட்டை, முதுகு, முழங்கை, மணிக்கட்டு, முழங்கால், கணுக்கால் வலிகளுக்கான சிகிச்சை நிலையம்
AAA WELLNESS & REHAB
647.518.7472 -24 hrs Text line
416.283.7472
பிசியோதெராபி,கைரோபிராக்ரிக், அக்கியுபங்சர், பாதச் சிகிச்சை, மசாஜ், ஸ்பா
1345 Morningside Ave #17


# தனக்குத் தெரியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்







உங்கள் வீட்டை விற்பதற்கு நீங்கள் விற்பனை முகவரை நாடுகிறீர்கள். விற்பனைத் தொகையில் முகவர்களுக்கான தரகுப் பணக் கழிவு உண்டு. அதிலும் தற்போது வீடு விற்கும் விலையில் அந்தத் தொகை கணிசமானது. வழமை போல, 'உவருக்கு ஏன் வீணாய் அவ்வளவு காசு குடுப்பான்?' என்று நீங்களே முகவர் வேலையைத் தொடங்கத் தயாராகக் கூடும்.

நம்ம பக்கத்து வீட்டுக்காரர் இப்படித் தான் 'வீடு விற்கிறேன், போர்வழி' என்று புறப்பட்டு, கடைசியில் அதற்கும் பணம் செலவிட்டு, முகவரைப் பிடித்து விற்க வேண்டியதாயிற்று. தனியார்கள் தங்கள் வீடுகளை விற்பது ஒன்றும் தலையால் மண் கிண்டும் வேலை அல்ல. இருந்தாலும், அது மிகப் பெரிய பொறுப்பான விடயம். அதற்கான அறிவு, திறமை, நேரம் உள்ளவர்களால் தங்கள் வீட்டை விற்று பணத்தைச் சேமிக்க முடியும். வீட்டுக்கு வெளியே மட்டையில் 'வீடு விற்பனைக்கு' என்று எழுதி தொங்க விட்டால், வாங்குவோர் வரிசையில் நிற்பார்கள் என்று எதிர்பார்த்தால்... ஜாக்கிரதை!

இணையத்தில் வீடு விற்றுத் தரும் நிறுவனங்கள் உள்ளன. நம்ம பக்கத்து வீட்டுக்காரர் அவற்றுக்கு பணம் செலுத்த, அவர்கள் வீடு விற்பனை மட்டையையும் கொடுத்து, இணையத்திலும் விளம்பரம் செய்திருந்தார்கள்.

ஆனால் இந்த நிறுவனங்கள் அனுமதி பெற்ற விற்பனை முகவர்கள் அல்ல. இந்த நிறுவனங்கள் உங்கள் வீட்டு விபரங்கள், படங்கள், வீடியோக்களை இணையத்தில் விளம்பரப்படுத்தி, MLS எனப்படும் முகவர்கள் பயன்படுத்தும் தரவுத் தொகுப்பில் சேர்க்க சுமார் இரண்டாயிரம் டொலர் வரை அறவிடுவார்கள். உங்கள் வீடு விற்பனையாகா விட்டால் அந்தப் பணம் அம்போ தான்! உங்களுக்குத் திருப்பிக் கிடைக்காது. ஆனால் முகவர்களுக்கு நீங்கள் ஆரம்பத்தில் எதுவுமே செலுத்தத் தேவையில்லை. உங்கள் வீட்டை விற்பதற்கு விளம்பரங்கள் தொடக்கம் முகவர்கள் செய்யும் எந்த வேலைக்கும் நீங்கள் முற்பணம் செலுத்தத் தேவையில்லை. உங்கள் வீடு விற்பனையாகா விட்டால், முகவருக்கு நீங்கள் எந்தப் பணமும் செலுத்தத் தேவையில்லை.

தற்போது ரொறன்ரோ வீட்டுச் சந்தையில் ஒரே வீட்டுக்கு பலர் போட்டி போட்டு விலையைக் கூட்டுவது சாதாரணமாய் நடைபெறும் நிகழ்வு. கேட்ட தொகையை விட, அதிக விலை கொடுத்து வாங்குவது அடிக்கடி நடைபெறும் ஒன்று. நீங்கள் சொந்தமாய் வீடு விற்கும் போது இந்தப் போட்டிக்கு யாரும் வர மாட்டார்கள். காரணம்... முகவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதால், போட்டியை ஏற்படுத்தக் கூடிய வகையில் விலையை நிர்ணயிப்பார்கள். போட்டிக்கு வரும் ஒவ்வொருவரும் மற்றவர் என்ன விலையில் வாங்க சம்மதிக்கிறார் என்பதை அறிய முடியாதபடிக்கு நியாயமான முறையில் விற்பனை நடக்கும். ஆனால் தனியார் வீட்டை விற்கும்போது, இந்த இரகசியக் காப்பு இருக்காது. வீட்டுக்காரர் யார் யார் இன்ன விலைக்கு வாங்கச் சம்மதிக்கிறார் என்பதை எல்லோருக்கும் சொல்ல முடியும். இதனால் வீடு வாங்க விரும்புவோர் பெரும்பாலும் இந்தப் போட்டிக்கு வருவதில்லை. எனவே எதிர்பார்த்தபடி அதிக விலைக்கு விற்க முடியாது.

முகவருக்கு உங்கள் வீடு இருக்கும் பகுதியில் உள்ள மற்ற வீடுகளின் விலை பற்றிய சந்தை நிலைவரம் தெரியும். ஆனால் நீங்கள் விற்கும்போது, உங்களுக்கு உங்கள் வீட்டின் விலை என்னவாக இருக்கும் என்று தெரியாது. ஒரு தன்னம்பிக்கையில் அதிக விலைக்கு விற்பனைக்கு விட்டு காத்திருப்பீர்கள். அல்லது வீட்டு விலையை நிர்ணயிக்க ஒருவருக்கு பணம் செலுத்தி விலையை அறிய வேண்டியிருக்கும். நீங்கள் முகவருக்கு செலுத்தும் பணத்தை மிச்சம் பிடிப்பது வாங்குபவருக்குத் தெரிந்தால், அவர் அதிலும் பங்கு கேட்கக் கூடும். சில நேரங்களில் வாங்குபவர் முகவரோடு வருவார். அவரோடு பேரம் பேசும்போது, அவரின் தரகுப் பணமும் உங்களின் விற்பனைப் பணத்தில் இருந்து தான் கழிக்கப்படும். இந்த முகவர்களும் தங்கள் அனுபவத்தின் மூலம் உங்களிடம் இருந்து முடிந்தவரை விற்பனைப் பணத்தைக் கழிக்கப் பார்ப்பார்கள்.

நீங்கள் வீடு விற்கும்போது, உங்கள் வீட்டின் சகல பிரச்சனைகளையும் நீங்கள் வாங்குபவருக்குச் சொல்ல வேண்டும். எதையும் மறைக்க முடியாது. எதையாவது மறைத்திருந்தால், வீட்டை விற்ற நீண்ட நாட்களின் பின்னாலும் வாங்கியவர் உங்களிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரலாம். ஆனால், வீட்டு முகவர்கள் இது குறித்து உங்களுக்கு சகல விதமான சட்ட உதவிகளையும் பெற்றுத் தருவார்கள்.

தனியார் வீடு விற்கும்போது, கடன் கொடுக்கும் வங்கிகள் கவனமாய் இருக்கும். சில நேரங்களில் மோசடிகள் நடைபெறலாம் என்று அவை சந்தேகப்படும். வீட்டின் பெறுமதியை விட அதிகமான விலைக்கு விற்கப்படுவதாக வங்கிகள் கருதினால் அவை தங்கள் பெறுமதி மதிப்பீட்டாளரை அனுப்பி விலையை மதிப்பிடும். ஏதாவது தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால், வீட்டுக்கடனை அவை வழங்கா. முகவரைக் கொண்டு வீடு வாங்க முயற்சிப்போர் பெரும்பாலும் வங்கிகளில் முதலிலேயே கடன் வசதிகளை ஒழுங்கு செய்திருப்பார்கள். எனவே வீடு விற்க ஒப்பந்தம் செய்யப்படும்போது, வாங்குபவரிடம் பணம் இருக்கும்.

நீங்கள் உங்கள் வீட்டை விற்று பணத்தைச் சேமிக்கலாம் தான். ஆனால் அதனால் வரக்கூடிய ஆபத்துக்களைத் தெரிந்து கொள்ளுங்கள். இல்லாவிடில், தனக்குத் தெரியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம் என்பது போல, ஆப்பிழுத்த குரங்கு போல் மாட்டிக் கொண்டு முழிக்காதீர்கள். சுவடியில் விளம்பரம் செய்யும் விற்பனை முகவர்கள் போன்ற அனுபவமும் அனுமதியும் பெற்ற முகவர்களை அணுகி ஆலோசனை பெறுங்கள். ஆலோசனை பெறும்போது, சுவடியில் உங்கள் விளம்பரத்தைக் கண்டே வந்தோம் என்பதையும் காதில் போட்டு வையுங்கள்.

விசேட கழிவுகள் கிடைக்கலாம்.


வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!
Leo Swampillai
Sales Representative
Homelife/Future Realty Inc.Brokerage*
Bus:905.201.9977
416.347.8732
leo33@rogers.com